2018 மார்ச் 21]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரு நாளும் பேரவைத் தலைவர் வேண்டுகோளை நீங்கள் ஏற்றுக்கொண்டதே இல்லை. (குறுக்கீடு) நீங்கள் பிடித்த முயலுக்கு மூன்று கால் என்று பேசிக்கொண்டேதான் இருப்பீர்கள். (குறுக்கீடு) ஒருநாளும் நீங்கள் ஒத்துழைத்ததே இல்லை. Sorry. உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் ஒத்துழைக்கமாட்டேன் என்கிறீர்கள். முடியுங்கள்.

திரு. உ. மதிவாணன்: 2006-2011-ல் தேசிய அளவில் 21.92%, அதற்கு பாதி அளவாக தமிழ்நாட்டில் தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சி புரிந்த காலத்தில்தான் வறுமைக் கோட்டிற்குக்கீழே உள்ளவர்களின் அளவு 11.28% ஆக இருந்தது. ஆக, இன்று நடக்கக்கூடிய ஆட்சியைவிட சிறப்பான ஆட்சியைத் தந்தவர் தலைவர் கலைஞர். அந்த ஆட்சி மீண்டும் வரும். மக்கள் சிறப்பாக இருப்பார்கள் என்று கூறி, உரையை நிறைவு செய்கிறேன். வணக்கம்.

7. அரசினர் தீர்மானம்

பேரவை விதி 32-ஐத் தளர்த்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நாளை 22-3-2018 (வியாழக்கிழமை) அன்று வினாக்கள்-விடைகள் நேரத்தை ஒத்திவைப்பது குறித்த தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“சட்டமன்றப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்-விடைகள் என்று உள்ள சட்டமன்றப் பேரவை விதி 32-ஐ (22-3-2018) வியாழக்கிழமை அன்று தளர்த்தி அந்நேரத்தை அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்”

என்னும் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

[பேரவைத் தலைவர்] [2018 மார்ச் 21

நாளை, 22-3-2018 அன்று வினாக்கள்-விடைகள் நேரம் இல்லை.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (22-3-2018), வியாழக்கிழமை காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 3-33 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

33. 2005 ஆம் ஆண்டு தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் வரம்பிலிருந்து அறிவிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள தமிழ்நாடு அரசால் ஏற்படுத்தப்பட்ட உளவுத்தகவல் மற்றும் பாதுகாப்பு அமைப்புகளுக்கு விலக்களித்தது குறித்து பொது (நிருவாகம் 1 & சட்டமன்றம்) துறையின் 14-10-2005 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 1042-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2005 ஆம் ஆண்டு தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 22/2005) 24(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

34. 2005 ஆம் ஆண்டு தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் வரம்பிலிருந்து அறிவிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள தமிழ்நாடு அரசால் ஏற்படுத்தப்பட்ட உளவுத்தகவல் மற்றும் பாதுகாப்பு அமைப்புகளுக்கு விலக்களித்தது குறித்து பொது (நிருவாகம் 1 & சட்டமன்றம்) துறையின் 14-10-2005 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 1043-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2005 ஆம் ஆண்டு தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 22/2005) 24(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

35. 2005 ஆம் ஆண்டு தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் வரம்பிலிருந்து அறிவிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள தமிழ்நாடு அரசால் ஏற்படுத்தப்பட்ட உளவுத்தகவல் மற்றும் பாதுகாப்பு அமைப்புகளுக்கு விலக்களித்தது குறித்து பொது (நிருவாகம் 1 & சட்டமன்றம்) துறையின் 14-10-2005 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 1044-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2005 ஆம் ஆண்டு தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 22/2005) 24(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].